**செய்தி வெளியீடு எண் : 1028** **நாள் : 23.07.2024**

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் இன்று (23.7.2024) தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் பத்திரிகையாளர் நல வாரியத்தின் ஏழாவது கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பத்திரிகையாளர் ஓய்வூதியம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டன.

மேலும், பத்திரிகை நிறுவனத்தில் பணிபுரியும் அனைத்து நிலையிலான அலுவலர்களையும் மஜிதியா ஊதியக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், பத்திரிகையாளர் நலவாரிய உறுப்பினராக சேர்ப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும், பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த பொருண்மைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் இக்கூட்டத்தில் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பத்திரிகையாளர்களின் நலன் காக்கும் வகையில், பத்திரிகையாளர் ஓய்வூதியம் ரூ.12,000 ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் ரூ.6,000 ஆகவும், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி ரூ.5,00,000 ஆகவும், பத்திரிகையாளர் பணியிலிருக்கும் போது பெற்ற அதிகபட்ச ஆண்டு வருமானம் மற்றும் ஓய்வு பெறும் போது பெற்ற பணிக்கொடை ரூ.4,00,000 ஆகவும், பத்திரிகையாளர் நல நிதிய உதவித் தொகை ரூ.2,50,000 ஆகவும், கொரோனா இழப்பீட்டுத் தொகை ரூ.10,00,000 ஆகவும் உயர்த்தப்பட்டு, பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

பத்திரிகையாளர்களின் நலன் காக்க, பத்திரிகையாளர் நல வாரியம் தோற்றுவித்து, 3270 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, வாரியத்தின் மூலமாக 97 பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் 38 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு குடும்ப உதவி நிதி உட்பட பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பத்திரிகையாளர்கள் குடும்பங்களிலிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பத்திரிகையாளர்கள் ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பிக்கும்போது அனைத்து வகையிலும் குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூபாய் 1,20,000/–லிருந்து ரூபாய் 2,50,000/– ஆக உயர்த்தப்படுவதாகவும் தெரிவித்தார். பத்திரிகையாளர் நல வாரியக் குழுவின் உறுப்பினர்களாக, அச்சு, காட்சி மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரிபவர்களை உறுப்பினர்களாக சேர்ப்பது குறித்து பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து, இவ்வாரியத்தின் மூலமாக வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை போன்றவை உயர்த்தப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் வந்திருக்கிறது. இக்கோரிக்கைகளை ஆய்வு செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொண்டார்.

இக்கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை இணை செயலாளர் திரு. ஷ்ரவன் குமார் ஜடாவத், இ.ஆ.ப., பத்திரிகையாளர் நல வாரியத்தின் அலுவல் சாரா உறுப்பினர்கள் திரு.ஆர்.எம்.ஆர்.ரமேஷ், திரு.பி.கோலப்பன், திருமதி லட்சுமி சுப்பிரமணியன், திரு.எஸ்.கவாஸ்கர், திரு.எம்.ரமேஷ், அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu